1995 ஏப்ரல் 25]

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் நிதிநெருக்கடி காரணமாக புதிய அரசு கலைக் கல்லூரிகளை தொடங்கும் வாய்ப்பு தற்போது இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 437, திரு. வே. பெரியசாமி, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.

437—

அந்தியூர் ஒன்றியத்தில் கிராம அங்காடி அமைத்தல்

***24472—**திரு. வே. பெரியசாமி:

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம், அந்தியூர் ஒன்றியம், குப்பாண்டம்பாளையம் ஊராட்சி, காட்டூர் தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கியில் உள்ள கிராம அங்காடியின் உணவுப் பொருள்களை அப்பகுதி மக்கள் நீண்ட தூரம் வந்து வாங்க சிரமப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், கருவல்வாடிப்புதூரில் ஒரு கிளை கிராம அங்காடி திறக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன், கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) பெரியார் மாவட்டம் அந்தியூர் ஒன்றியத்தில் உள்ள குப்பாண்டம் பாளைம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி காட்டூர் என்னும் இடத்தில் நியாய விலைக் கடை ஒன்றினை நடத்தி வருகிறது. காட்டூர் நியாயவிலைக் கடையுடன் இணைக்கப்பட்டுள்ள கிராமங்கள் நியாயவிலைக் கடை இயங்கும் இடத்திலிருந்து 3 கிலோ மீட்டர் தூரத்திற்குள் அடங்கியிருக்கின்றன.

(ஆ) கருவல்வாடிப்புதூர் கிராமம் காட்டூர் நியாயவிலைக் கடையிலிருந்து 1.5 கிலோ மீட்டர் தூரத்தில் இருப்பதால் புதிய கடை ஒன்றை அங்கே திறப்பதற்கு சாத்தியக்கூறுகள் தற்போது ஏதும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டம், அந்தியூர் ஒன்றியம் குப்பாண்டம்பாளையம் ஊராட்சியில் காட்டூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் இணைந்தாற்போன்று கிராம கூட்டுறவு அங்காடி இருக்கிறது. அந்த

அங்காடிக்கு கருவல்வாடிப்புதூர், நஞ்சுண்டாபுரம், பெருமாள்பாளையம் போன்ற கிராமங்களிலுள்ள மக்கள் நீண்டதூரம் நடந்து வந்து உணவுப் பொருட்களை வாங்கிச் செல்ல வேண்டிய நிலை இருக்கிறது. இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகுதான் எங்களுடைய தொகுதியில் எண்ணமங்கலத்திலே இருந்த ஒரு சொசைட்டியை பிரித்துத்தரக் கேட்டேன், தென்னம்பாளையத்திலே போட்டுக் கொடுத்தார்கள். அதேபோல் சூசைப்பாளையத்திலே ஒரு சொசைட்டி இருந்தது. அதை பிரித்துத்தரக் கேட்டேன். உடனடியாக வெள்ளையம்பாளையத்தில் போட்டுக் கொடுத்தார்கள். அதுபோல் 3, 4, இடங்களில், மக்களுடைய கஷ்டங்களை உணர்ந்த இதயதெய்வம், நாங்கள் எல்லாம் கடவுளாக வணங்கிக் கொண்டிருக்கிற நிரந்தர முதல்வர் (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் இதனை தொடர்ந்து செய்து வருகிறார்கள். ஏழை எளிய மக்களின் மேல் உள்ள பற்றின் காரணமாக, எத்தனையோ எதிர்ப்புகளுக்கு இடையிலேயும், பல்வேறு சோதனைகளுக்கு இடையிலேயும், பல்வேறு நலத்திட்டங்களை வேகமாக செய்து வருகிறார்கள். அருள் கூர்ந்து, நான் கேட்டிருக்கின்ற கருவல்வாடிப்புதூர் அருகாமையிலே ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் நஞ்சுண்டாபுரம் என்ற ஊர் இருக்கிறது. அங்கேயாவது அந்த கிராம அங்காடியின் கிளையை, வாரத்திற்கு இரண்டு நாட்கள் திறந்து நடத்துகின்ற நிலையை உருவாக்கித்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று உங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11.00

மாண்புமிகு பேரவைத் தலைவர் :பேரவையின் முன் அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. கா.ப. பட்டாபிராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சிக் காலத்திலேதான் மிகக் குறைந்த எண்ணிக்கையிலே உள்ள கிராம மக்களுக்குக்கூட உணவுப் பொருட்கள் வசதியாகக் கிடைக்கப் பெறவேண்டும் என்ற அடிப்படையிலே அவர்களுக்காக கிராமங்களிலே பகுதிநேரக் கடைகளைத் திறந்திருக்கிறோம். அந்த அடிப்படையிலே காட்டூர் என்ற கிராமத்தில் இருக்கிற நியாயவிலைக் கடை ஏற்கெனவே செயல்பட்டு வருகிறது. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் கேள்வியில் குறிப்பிட்டுள்ளது போன்று காட்டூர் தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கி என்று எதுவும் இல்லை. குப்பாண்டம்பாளையம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியினால் ஒரு நியாயவிலைக் கடை காட்டூரிலே நடத்தப்பட்டு வருகிறது. இந்த நியாய விலைக் கடையில்

1995 ஏப்ரல் 25]

ஏறத்தாழ 5 கிராமங்கள் இணைக்கப்பட்டிருக்கின்றன. அதாவது, காட்டூர், கருவல்வாடிப்புதூர், செங்காட்டுப்புதூர், நஞ்சுண்டாபுரம், குளத்தூர், தோப்பூர் கிராமங்கள் இதிலே அடங்கியிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் எடுத்துச்சொன்னது போல, செங்காட்டுப்புதூர், நஞ்சுண்டாபுரம் ஆகிய அந்தப் பகுதிகளில் 153 குடும்ப அட்டைகளே இருக்கின்றன. அப்படியிருந்தாலும்கூட, அங்கே பகுதி நேரக் கடை திறக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் எடுத்துச் சொன்னார்கள். ஒரு பகுதிநேரக் கடை திறக்க வேண்டுமென்றால், அதிலே சில நிபந்தனைகள் இருக்கின்றன. வாரத்திலே 3 நாட்கள் தாய்க் கடையிலே இருந்து அலுவலர்கள் அந்தப் பகுதிநேரக் கடைக்குச் செல்ல வேண்டும். அவர்கள் அங்கே சென்று உணவுப் பொருட்களை விநியோகிக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அப்படிப் பார்க்கின்றபோது, முழு நேரக் கடையும், பகுதி நேரக் கடையும், இரண்டுமே பகுதிநேரக் கடைகளாக ஆகிவிடுகின்றன. எனவேதான், மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல், தமிழகத்திலே இன்று எங்கெங்கு நியாயவிலைக் கடைகள் தேவையோ அங்கெல்லாம் புதிய பகுதிநேரக் கடைகள் உருவாக்க வேண்டுமென்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய திட்டத்தின்படி ஒரு ஊரில் பகுதி நேரக் கடைகளைத் திறப்பதில், பெண்களுக்கு முதலிடம் கொடுத்து, அவர்களை கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாக ஏஜெண்டுகளாக நியமித்து, அவர்கள் மூலமாக குடிமைப் பொருள்களை வழங்குகின்ற ஒரு திட்டத்தை கொண்டு வந்திருக்கிறோம். அந்த அடிப்படையிலே கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக பகுதிநேரக் கடைகளை நடத்துகின்ற பெண்கள் ஒப்பந்தம் செய்து கொள்வார்கள். விற்பனையின் அடிப்படையிலே அவர்களுக்கு கமிஷன் வழங்கப்படுகிறது. 1 கிலோ அரிசி, 1 கிலோ சர்க்கரை, 1 லிட்டர் மண்ணெண்ணெய், 1 கிலோ கோதுமை விற்றால் அவர்களுக்கு 10 பைசா வீதம் கமிஷன் வழங்குகின்றோம். அந்த அடிப்படையிலே, தேவையான அட்டைகள் மாண்புமிகு உறுப்பினர் கேட்கின்ற அந்த கிராமத்தில் இருக்குமேயானால், பெண்களே நடத்துகின்ற அந்த மாதிரி பகுதி நேரக் கடைகள் உருவாக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது விநியோகத் திட்டத்தின் மூலமாக அனைத்து தரப்பு மக்களுக்கும், அரிசி, கோதுமை, சர்க்கரை, மண்ணெண்ணெய் போன்ற அத்தியாவசியப் பொருட்கள் கிடைக்கச் செய்வதில் தமிழகத்தினுடைய தானைத் தலைவி அவர்கள் தனி ஆர்வம் காட்டிவருகின்ற காரணத்தினால் தான். மற்ற மாநிலங்கள் கூட அதைப் பார்த்து பின்பற்றி வருகின்ற இந்த நல்ல நேரத்திலே, அமைச்சர் அவர்கள் சொன்னதைப் போல நஞ்சுண்டாபுரம்,

பெருமாள்பாளையம் பகுதிகளிலே ஏதாவது ஒரு இடத்தில் வாரத்திற்கு ஒருமுறை செயல்படுகின்ற பகுதிநேரக் கடைகளைத் திறக்க வேண்டும். இப்போது நிறைய இடங்களில் பெண்களை நியமனம் செய்து இருக்கின்றீர்கள். அதேபோல், பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து, அவர்களுக்கு வாழ்வளிக்கின்ற இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள், தனியாக அந்தப் பகுதிகளிலே பெண்களுக்கு என்று ஒரு கடையை ஆரம்பித்து, அந்தப் பகுதி மக்கள் அத்தியாவசிய உணவுப் பண்டங்களை வாங்குவதற்காகப் படும் அல்லல்களைத் தவிர்க்கின்ற வகையிலே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் நல்லாட்சியில், அதற்கான வழிமுறை செய்யப்படுமா என்பதை உங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா.ப. பட்டாபிராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நான் ஏற்கெனவே என்னுடைய விடையிலே தந்திருக்கிறேன். இன்றைக்கு, புரட்சித் தலைவி அவர்கள் நடைமுறைக்குக் கொண்டு வந்திருக்கிற, பெண்களால் நடத்தப்படுகின்ற பகுதி நேரக் கடையை, காங்கேயம் தொகுதியிலே பரீட்சார்த்தமாக ஒரு கடையை அங்கே உருவாக்கி, அதனுடைய முன்னேற்றம் எப்படி இருக்கிறது என்பதைக் கண்காணித்து வருகின்றோம். அந்த அடிப்படையிலே மாண்புமிகு உறுப்பினர் எடுத்துச் சொன்னதுபோல, இந்தியாவிலே இன்று தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றுக் கொண்ட பின்னாலேதான் இந்தியாவிலேயே தமிழகம் முதலிடத்திலே தன்னுடைய நிலையை சாதித்துக் கொண்டிருக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி). அந்த அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வேண்டுகோள் விரைவில் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 438, திரு.நா.சா. பழனிசாமி, இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக திரு. வி. பி. சந்திரசேகர் கேட்கிறார், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

438—

கிணத்துக்கடவில் பேருந்து நிலையம் அமைத்தல்

***11068—**திரு. நா. சா. பழனிசாமி:

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிணத்துக்கடவு பேரூராட்சி சந்தை வளாகத்தில் பேருந்து நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?